# வடபகுதி இராணுவ உயர் அதிகாரி பதவி நீக்கம் குற்றவாளியாக நீதிமன்றில் நிறுத்தப்பட்டார்

(கொழும்பு)
வடபகுதியில் கடமையில் இருந்த இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தனது மேலதிகாரியின் கட்டளைக்குப் பணிய மறுத்தமைக்காக பதவியில் இருந்து நீக்கப்பட்டதோடு இராணுவ நீதிமன்றம் முன் கொண்டு வரப்பட்டுள்ளார்.
(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 16 இதழ் 294
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 01 — 12 — 1992

## படையினர் தாக்குதல் எட்டு தமிழர் பலி!

(கொழும்பு)
யாழ்ப்பாணக் குடாநாட்டில் படையினர்மேற்கொண்ட தாக்குதலில் 8 பொதுமக்கள் இறந்துள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. சாவகச்சேரியில் விமானப்
(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி படகு சேவை முற்றாகத் தடைப்பட்டது

(யாழ்ப்பாணம்)
கிளாலி படகுச்சேவை மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. நேற்று கிளாலி நோக்கிச்
(2ம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் நிலைமை மோசம்
# அவசர உதவிக்கு கோரிக்கை

## உலகநாடுகளுக்கு செஞ்சிலுவைச்சங்கம் அழைப்பு

(கொழும்பு)
சோமாலியாவிலும், யூகோஸிலாவியாவிலும் ஏற்பட்டிருப்பது போன்றதொரு மோசமான நெருக்கடி நிலை இலங்கையில் ஏற்பட்டு வருவதால் இலங்கைக்கு உதவுமாறு உலக நாடுகளுக்கு, இலங்கை வந்துள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க செயலர் திரு. ஸ்ரீபன் டேவிட் அவசரவேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் நெருக்கடி நிலை அதிகரித்து வருவதை ...தே சர்வதேச செஞ்சிலுவைச்சங்க, சர்வதேச செம் பிறை சங்க செயலாளர்நாயகமான திரு. ஸ்ரீபன் டேவிட் இலங்கை வந்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்: சோமாலியாவில் ஏற்பட்டுள்ள கொடும் பட்டினி நிலை போன்றும், பொஸ்னி
(4-ம் பக்கம் பார்க்க)

## குரும்பசிட்டிப் பகுதியில் கடும் மோதல்

(யாழ்ப்பாணம்)
பலாலி-குரும்பசிட்டிப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும்... மோதல் சம்பவம் நேற்று அதிகாலை வரை இடம் பெற்றதாகத் தெரியவருகிறது. சரமாரி
(4ம் பக்கம் பார்க்க)

## படை முகாம்களிலிருந்து அகோர ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)
நேற்று முன்தினமிரவு தொடக்கம் அதிகாலை வரையில் யாழ்க்குடாவில் படை முகாம்களிலிருந்து நள்ளிரவு வேளையில் ஷெல்தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர்.
(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேச்சு நடத்துக அரசுக்கு பலரும் வற்புறுத்து

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு பிரச்...னைக்கு விரைவில் தீர்வுடன் அரசு விரைவில் பேச...ணவும் கொடிய யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வரவும் விடுதலைப் புலிகளுடன் அரசு விரைவில் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென தற்போது அரசை பலரும் வற்புறுத்தி வருகிறார்கள்.

அமைச்சர்கள், எம். பிக்கள் உட்பட ஐ. தே. க. முக்
(4ம் பக்கம் பார்க்க)

## ★ பருத்தித்துறை கடலில் கடற்படை சூடு மீனவர் உயிரிழப்பு

[புலோலி]
பருத்தித்துறைக் கடலில் படகு ஒன்றில் நேற்று மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி கடற்படை சுட்டதில் மீனவர் ஒருவர் மரணமடைந்தார்.
(4-ம் பக்கம் பார்க்க)

## ★ மட்டு. கோமாரியில் படையினரின் அவசர தேவைக்கு புதிய விமானதளம் அமைப்பு

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் இராணுவ ...டவடிக்கைக்காக புதிய ...மானத்தளம் ஒன்றைப் ...பன்படுத்துவது குறித்து ...ரச உயர் மட்டத்தில் ஆரா...ப்பட்டு வருகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தி...லுள்ள கோமாரி விமானத்...ளமே இவ்வாறு பயன்படுத்...ப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் இவ்விமானத்தளம் 2ம் உலகப்போரின் போது பிரிட்டிஷ் அரசினால் பயன்படுத்தப்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள்
(4-ம் பக்கம் பார்க்க)

## ★ இனப்பிரச்னைத் தீர்வு சுயாட்சி முறைக்கு இந்தியா ஆதரவு!

(புதுடில்லி)
இனப்பிரச்னை காரணம்தனி நாட்டு போராட்டம் நடைபெறும் நாடொன்றின் பிரச்னைக்கு 'சுயாட்சி' மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்ற கொள்கையையே இந்
(4-ம் பக்கம் பார்க்க)

## தெற்கில் மீண்டும் ஜே.வி.பி. அச்சுறுத்தல்

(கொழும்பு)
தென்பகுதியில் ஜே வி. பி. யினர் ஊடுருவி வருவதாக எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களிலே இந்த ஊடுருவல் அதிகரித்து வருவதாக புலனாய்வுத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது இந்தியாவில் தங்கியுள்ள இந்த அமைப்பின் முக்கியபிரமுகர்கள் அடிமட்ட ஆதரவாளர்கள் மூலம் தமது நடவடிக்கைகளை தொடர்வதற்கு திட்டமிட்டு வருவதாக கூறப்படுகிறது.
(4ம் பக்கம் பார்க்க)

## ★ கொழும்பில் பொலிஸ் நிலையங்கள் முழு உஷார் நிலையில்

(கொழும்பு)
கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள பொலிஸ் நிலையங்களிற்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகரில் பாது
(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரியில் 283 சிசு மரணம்

(யாழ்ப்பாணம்)
யாழ் மாவட்டத்தில் அண்மைக்காலமாக குழந்தைகளின் இறப்பு விகிதம் பெருமளவு அதிகரித்துக் காணப்படுவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.
(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### புதிய வகுப்புகள் (1993 கல்வியாண்டு)

1993 கல்வியாண்டிற்கான புதிய வகுப்புகள் ஆண்டு 4 தொடக்கம் ஆண்டு 11 வரை சகல பாடமும் கற்பிக்கப்படும். வகுப்பு ஆரம்பம்: 01-12-92 செவ்வாய் [நாளை] பிற்பகல் 3,00 மணி. புதிய கல்வி நிலையம். 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி 7012)

### தவறிவிட்டது

இ. சரவணபவன் ஆளடைக் கோட்டை இல. 480993390V என்பவருடைய அடையாள அட்டையும் காரியாலய அறிமுக அட்டையும் 27-11-92 அன்று நாச்சிமார் கோவிலடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் பல. நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மானிப்பாய் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி-7017)

### இன்று பட்டதாரிகளுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற பட்டதாரிப் பயிலுனர் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி இதுவரையில் புள்ளிகள் கிடைக்கப்பெறாதவர்களும், பயிற்சிக் கருத்தரங்கில் கலந்துகொள்வதற்கு (கொட்டகலையில்) அனுமதிக் கடிதம் கிடைக்கப்பெறாதவர்களுக்குமான பொதுக்கூட்டம் இன்று காலை 10-00 மணிக்கு யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது.

### சிறுமி மரணம்

(யாழ்ப்பாணம்)

மலேரியாவினால் பீடிக்கப்பட்டு பின்னர் செப்ரிஸிமியா நோய்க்கிலக்கான சிறுமி ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

யாழ்ப்பாணம் அரியாலை முதலியார் ஒழுங்கையைச் சேர்ந்தவரான செல்வி ஏ நிலாயினி என்ற 11 வயதுச் சிறுமியே மரணமானவராவார்.

இம்மாதத்தில் ஐந்து குழந்தைகள் செப்ரிஸிமியாவினால் பாதிக்கப்பட்டு இறந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (56-159)

### இராசி பலன்

1-12-1992

(தமிழுக்கு கார்த்திகை 16)

செவ்வாய்க்கிழமை

ஸப்தமி மு. இ. 10-12வரை அஸ்டம் பி. ப. 3-54 வரை மரணயோகம், இராகுகாலம் மாலை 3-15 முதல் 4-45வரை சுபயோகம் 10-45 முதல்வரை.

மேஷம்: தொழில் சிறப்பு, பெரியோர் ஆசி, குடும்ப நன்மை.

இடபம்: மனக்கசப்பு தொழில்போட்டி அலைச்சல்.

மிதுனம்: கடும் உழைப்பு, இடையூறுகள் குடும்பதுன்பம்.

கடகம்: காரிய வெற்றி. மனமகிழ்ச்சி இனசன உதவி.

சிங்கம்: புத்திரர் செலவு, வாக்கு வசீரம், பயணம் கைகூடுதல்

கன்னி: மனவேதனை, புறம்பேசுதல். அதிகாரிகள் தொல்லை.

துலாம்: சுயநலம், பணமுடை, பழைய நினைவுகள்.

விருச்சிகம்: கடித உறவு, உறவினர்வருகை, சுபகாரியம்.

தனுசு: வீண்தகராறு மனசங்கடம், அமைதிகுன்றல்.

மகரம்: எண்ணியது கைகூடும். தொழில்லாபம் கேளிக்கை.

கும்பம்: தொழில்போட்டி, கண்ணியகுறைவு குடும்பபிரிவு

மீனம்: வருவாய் அதிகரிப்பு சமயப்பணி, புதிய முயற்சி.

— ஜோஸ்யர்

உணவு உற்பத்தி

## 7500 குடும்பங்களுக்கு ஊக்குவிப்பு நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்தில் யு. எஸ். எயிட்-கெயர் விவசாய அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 7,500 விவசாய குடும்பங்களுக்கு உள்ளீடுகள் வழங்கி உணவு உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த உதவிகள் யாவும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் மூலம் வழங்கப்படவுள்ளது.

இதில் முதல் கட்டமாக 3000 விவசாயக் குடும்பங்களுக்கு நெல் உற்பத்திக்கான உள்ளீடுகள் வழங்கப்படும்.

மேலும் 45,00 விவசாயக் குடும்பங்களுக்கு மேல்நாட்டு மரக்கறி விதைகளும் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. (72)

## நூல் வெளியீட்டு ஊக்குவிப்பு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உள்ளூராட்சித் திணைக்களத்தில் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலாவின் தலைமையில் ''நூல் வெளியீட்டு ஊக்குவிப்பு அமைப்பு'' ஒன்று யாழ் நகரில் கடந்த வாரம் உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வவையில் எழுத்தாளர்கள், நூல்வெளியீட்டாளர்கள் நகரசபை, பிரதேசசபை செயலாளர்கள் சமாசங்கள். சனசமூக நிலையங்கள் ஆகியவற்றின் தலைவர்கள் உட்பட பெரும்பாலோர் கலந்துகொண்டார்கள்.

தமிழீழத்தில் பிரசுரமாகின்ற நூல்கள், சஞ்சிகைகள் ஆகியவற்றின் வற்பனைக்கு உதவுவதையே மேற்படி அமைப்பின் முக்கிய நோக்கமாக அமைந்திருக்குமென்று இந்த நூல் வெளியீட்டு அமைப்பின் செயலாளர் திரு டானியல் அன்ரனி தெரிவித்தார். (வி)

### வெளியீட்டுவிழா

(நெல்லியடி)

உடுப்பிட்டி கொத்தணி அதிபர் என். ஆனந்தராஜாவினால் எழுதப்பட்ட 'அறிவியல் உண்மைகள்' நூல் வெளியீட்டு விழா அண்மையில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் நடைபெற்றது.

நூல் வெளியீட்டுரையை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலாவும், சிறப்புரையை வடமராட்சி கோட்டக்கல்வி அதிகாரி திரு. எஸ். செல்லத்துரையும் வழங்கினார்கள்.

ஆய்வுரையை திருவாளர்கள் கலாமணி ஏ. வி. தங்கராஜா, சண்முகசுந்தரம், புலவர்மணி நீலகண்டன். திருமதி பா. இராஜேந்திரசிங்கம் ஆகியோர்கள் வழங்கினார்கள். (160)

---

**வெளிவந்துவிட்டது!**

**அறிவுக் களஞ்சியம் - 6**

இந்த இதழுடன் முதல் 6 இதழ்களுக்கான பொருளடக்கமும் உண்டு.

[ஏ-2625]

---

**பெயர் மாற்றம்**

பருத்தித்துறை வீதி, நெல்லியடி கரவெட்டியைச் சேர்ந்த மரியாம்பிள்ளை அந்தோனி என்னும் எனது பெயரை இன்று [01-12-1992] தொடக்கம்

**அன்ரனி தேவராஜா**

என சகல நடவடிக்கைக்கும் மாற்றம் செய்கிறேன்

அன்ரனி தேவராஜா

நெல்லியடி, கரவெட்டி.

[சி 7016]

---

**அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்**

சிரணி — சண்டிலிப்பாய்.

மகாசபை அங்கத்தவர்களை

**பதிவு செய்தல்**

மேற்படி சபையின் அங்கத்தவர்களாக சேரவிரும்பும் 18 வயதிற்கு மேற்பட்ட பக்தர்கள் தர்மகர்த்தா சபையுடன் தொடர்புகொண்டு விண்ணப்பப்பத்திரங்களை பெற்று, உரிய சந்தாப்பணத்தை செலுத்தி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களை ஆலய அலுவலகத்தில் கொடுக்குமாறு வேண்டுகிறோம். மகாசபை பற்றிய சகல விபரங்களையும் அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

செயலாளர்,

தர்மகர்த்தாசபை.

(ஏ-2627)

---

வனங்கள் வாழும் நாட்டிலே

குளிர்மை யென்றும் - வாழ்ந்திடுமோ

---

தபால்

## அடையாள அட்டைகள் வவுனியாவில் தேக்கம்

(திருநெல்வேலி)

தபால் அடையாள அட்டைகளை வழங்குவதற்காக யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படவேண்டிய தபால் அடையாள அட்டைகள் வவுனியாவில் வந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இவ் அறிமுக அட்டைக்கு விண்ணப்பித்த ஏராளமான மாணவர்களுக்கு இவ் அறிமுக அட்டையினை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

யாழ் பிரதம தபாலகம் இவ் அட்டையினை வழங்க அனுமதித்துள்ளபோதும் இவற்றுக்கான அட்டைகள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது குறிப்பிடப்பட்டது. (157)

## இனப் பிரச்சினையை தீர்த்து வைக்கும் சக்தி ஜனாதிபதிக்கே உண்டு

(கொழும்பு)

''இந்நாட்டில் இனப்பிரச்சினையை தீர்த்துவைக்கும் சக்தி ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு மட்டுமே உண்டு.''

கொழும்பு மாநகர உதவி மேயர் திரு எஸ். கணேசலிங்கம் வவுனியாவில் அண்மையில் ஆடை தயாரிப்பு தொழிற்சாலை திறப்புவிழாவில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆளும் ஐக்கியதேசியக்கட்சியினர் இம்முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் என்றும் தமிழ்க் குழுக்களும் தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்தால் இப்பிரச்சினைக்கு இலகுவில் தீர்வு காண முடியும் என்றும் கூறினார். (க)

## ★ அகதிகள் விவகாரம்

## ஐரோப்பிய சமூகம் மாநாடு கூடியது

(லண்டன்)

ஐரோப்பிய சமூகத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் கலந்துகொள்ளும் இரு நாள் மாநாடு நேற்று லண்டனில் ஆரம்பமாகியது.

அரசியல் அந்தஸ்து கோரி விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் தகுந்த ஆதாரம் காணப்படாதவிடத்து நிராகரித்தல், தஞ்சம் கோரிய விண்ணப்பதாரிகளை வேறு இடத்திற்கு மாற்றுதல் போன்ற விடயங்கள் உட்பட பல விடயங்கள் ஆராயப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

பெருமளவு அகதிகள் அகதி அந்தஸ்து கோரி ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதும் இதனால் ஐரோப்பிய நாடுகள் பெரும் பிரச்சினையை எதிர்நோக்குவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

### சமய அறிவு போட்டி

(பண்டத்தரிப்பு)

இணுவில் திருநெறிய தமிழ் மறைக்கழகம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் சமய அறிவுப்போட்டி, மனனப்போட்டி நாவன்மைப் போட்டி ஆகிய பலவேறு போட்டிகளை நடாத்தவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களை இன்று முதலாம் திகதி கழக செயலாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (72)

### குமாரி கப்பல் வருகிறது

(யாழ்ப்பாணம்)

குமாரி கப்பல் இம்மாதம் 10-ம் திகதி பருத்தித்துறைக்கு வருகின்றது.

இக்கப்பலில் அரிசி, மா பெருமளவில் வருவதாகவும், தபால் பொதிகள் கொண்டு வருவது சம்பந்தமான பேச்சுக்கள் நடைபெறுவதாகவும் யாழ் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வி)

---

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்**

**புளோறன்ஸ் நைற்றிங்கேல் பதக்கம்**

போர்க்காலத்திலோ அல்லது சாதாரண காலத்திலோ நோயாளர்களை மகா உன்னத முறையில் பராமரித்துக் காப்பாற்றியுள்ள ஆண் / பெண் / தாதி/ தொண்டர் ஒருவரைக் கௌரவித்தளிக்கப்படும் இப்பதக்கத்தைப் பெறத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்விண்ணப்பங்கள் போதிய ஆதாரங்களுடன் விண்ணப்பதாரிகள் வதியும் உதவி அரசாங்க செஞ்சிலுவைப் பிரிவுகளின் செயற்குழுவுக்கு 05 - 12 - 92 க்கு முன் அனுப்பப்படல் வேண்டும். பிரிவுகள் கிளைத் தலைமையகத்திற்கு இவற்றைத் தகுதியானால் 10 - 12 - 92 க்கு முன் அனுப்பி வைக்கும். யாழ். மாவட்டத்தில் தகுதியானவரை கிளை நிர்வாக சபை தெரிவு செய்யும்.

கௌரவ செயலாளர்

73, கண்டிவீதி,

யாழ்ப்பாணம்.

30 - 11 - 1992.

(ஏ-2629)

# அ. தி. மு. க. - காங்கிரஸ் உறவில் பெரும் விரிசல்

# தமிழகத்தில் அரசியல் மாற்றம் ஏற்படுமா?

தமிழ்நாட்டின் முதல்வர் ஜெயலலிதாவின் ஆட்சி தொடருமா அல்லது மாறுமா இதுதான் பலரது மனதிலும் அலைமோதும் கேள்வி.

தமிழ்நாட்டு அரசியலைக் கவனித்து வருபவர்களுக்கு மேலோட்டமாகப் பார்க்கும் போது எந்த மாற்றமும் இப்போதைக்கு சாத்தியம் என்று தோன்றவில்லை. எல்லாம் வழக்கம்போல நடந்துகொண்டிருக்கின்றது.

ஆனால் சற்றுக் கூர்ந்து அவதானிக்கும் போது கூட்டிக்கழித்துக் கணக்குப்பார்க்கும்போது முதலமைச்சர் ஜெயலலிதா ஆட்சிக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதை உணர முடிகிறது.

அந்த அச்சுறுத்தல் கருணாநிதியிடமிருந்து வந்திருக்க வேண்டும். வரவில்லை. சுப்பிரமணிய சுவாமியிடமிருந்து அந்த அச்சுறுத்தல் வந்துவிட்டதென்று பலரும் கூறுவதை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ளத்தயாராக இல்லை.

சந்திரலேகா என்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி மூலம் ஜெயலலிதா ஆட்சிக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

சந்திரலேகா தமது அரசு உயர் பதவியை உதறிவிட்டு அரசியலில் குதித்தபோது அது முதலமைச்சருக்கு பெரும் அதிர்ச்சிதரும் செய்தியாக அமைந்து விட்டது.

சந்திரலேகாவைக் களத்தில் இறக்கி சுவாமி ஒருபுறம் முதல்வருக்குக் கலக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார் என்றால் அ. தி. மு. க. வுக்குள்ளும் அ. தி. மு. க. வுக்கு முட்டுக் கொடுத்திருக்கும். காங்கிரஸ் கட்சியிலிருந்தும் புதிய கோணத்தில் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் இங்கு சுட்டிக்காட்டவேண்டும்

இதனை வேறு வகையில் சொல்வதனால் அ. தி. மு. க. வில் சிலர் விலை போகத்தயாராக இருக்கிறார்கள் அவர்களை விலைபேசக் காங்கிரஸும் தயாராக இருக்கிறது என லாம். இந்தக் காரியத்தைக் கச்சிதமாக முடித்துவைக்கவே தமிழ்நாட்டில் ஜனதா தலைவர் சுப்பிரமணிய சுவாமி முகாமிட்டிருக்கிறார்

சுவாமியின் அரசியல் வரலாறு நமக்குத் தெரியும். அவருக்கென்று கொடி, குடை ஆலவட்டம் அதிகம் இல்லை. ஜனதா கட்சித் தலைவர் என்ற முத்திரையுடன் அவர் அரசியல சதுரங்கத்தில் காய்களை வெற்றிகரமாக நகர்த்தியவர்.

அவர் திடீர் என்று தமிழ்நாட்டின் மீது அக்கறை கொண்டு புதிய அவதாரம் எடுத்து வந்திருக்கிறாரே! அப்படி வந்தவர் மிகவும துணிச்சலாகப் பேசி செயல்படுகிறாரே எப்படி என்று ஆராய்ந்து பார்த்தால் அவருக்குப் பின்பலமாக பிரதமர் நரசிம்மராவே இருப்பது தெரிகிறது ஆட்டுவிப்பவர் பிரதமராக இருப்பதால் சுவாமியின் குரல உரத்துக் கேட்பதில் வியப்பென்ன!

சுவாமிக்கு தமிழ்நாட்டில் சன் இல்லை. வேல் இல்லை. ஆறு படை வீடுகளில் ஒருபடை வீடுகூட இல்லை. என்றாலும் கடந்த ஓரிரு மாதங்களில் ஜெயலலிதாவை ஆட்டம் காணச் செய்துவிட்டார்.

அதற்கு அவர் வியூகம் வகுத்துச் செயல்படும் முறைதான் பெரும் பக்கபலமாக உள்ளது

ஜெயலலிதாவுக்கு எதிராக அவர் மும்முனைப்போர் தொடுத்து இருக்கிறார். முதலில் பத்திரிகைகள் மூலமாகவும், பொதுக்கூட்டங்கள் வாயிலாகவும் ஜெயலலிதாவுக்கு எதிராக மக்கள் கருத்தை உருவாக்குகிறார். அடுத்து ஜெயலலிதா லஞ்சம் வாங்கி பணம் சேர்க்கிறார். ஊழல் செய்கிறார். அதிகார துஷ்பிரயோகம் பண்ணுகிறார் என்று கூறி அவரது பெயரை வெற்றிகரமாக களங்கப்படுத்திக் கொண்டிருக்கிறார். மூன்றாவதாக அ. தி. மு. க. வுக்குள் பிளவை ஏற்படுத்திக் கொண்டே அ. தி. மு. க. வுடனான கூட்டணியை விரும்பாத காங்கிரஸ் அணிக்கு வலுவூட்டிக் கொண்டிருக்கிறார்.

இறுதி இலக்கு அ. தி. மு. க வினரின் ஓர் அணியையும் காங்கிரஸ் ஓர் அணியையும் இணைத்து தமிழ்நாட்டில் ஜெயலலிதா அரசுக்குப் பதிலாக மாற்று அரசு ஒன்றை உருவாக்குவது தான்

இது சாத்தியமா என்றால் இன்றுள்ள தமிழக அரசியல் நிலையில் இது சாத்தியம்தான். எப்படி சாத்தியம் என்றால் மேலிடத்து அதாவது டில்லி அனுக்கிரகம் பூரணமாக இருப்பதால் தான்

சுப்பிரமணிய சுவாமி ஏற்கனவே செய்துள்ள சாதனை ஜனதா தளத்தைப் பிளந்து மத்தியில் நரசிம்மராவ் அரசுக்கு ஜெயலலிதாதயவு தேவையில்லாமல் செய்ததுதான்.

அ. தி. மு. க. ஆதரவின்றி மத்தியில் நரசிம்மராவ் அரசு விரலைக்கூட அசைக்க முடியாது என்ற நினைப்பில் சற்று மிகைபாகவே அதிலும் காங்கிரஸ் காரர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ளும் விதத்தில் ஜெயலலிதா செயற்பட்டது அவருக்கே இன்று வினையாக முடிந்து விட்டது

அதன் பலன் அ. தி. மு. க. காங்கிரஸ் கூட்டணி இன்னும் எவ்வளவுநாளைக்கு நீடிக்கும் என்ற பெரிய கேள்விக்குறியை இன்று ஏற்படுத்தியுள்ளது.

அ. தி. மு. க. வினரும் காங்கிரஸுடன் இனி கூட்டணி தேவையில்லை என்று அறிக்கைகள் மூலம் பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். மக்களவைக்கு ஒன்றும் தமிழக சட்டப்பேரவைக்கு ஒன்றுமாக இரு இடைத்தேர்தல்கள் விரைவில் தமிழ்நாட்டில் நடத்தப்படவேண்டியுள்ளது.

அரசியல் நிலை தனக்குச் சாதகமாக இல்லை என்றதால் பழனி மக்களவைத் தொகுதி இடைத்தேர்தலை ஒத்திப் போட்டுக்கொண்டிருந்த ஜெயலலிதா இனியும் எவ்வளவு காலத்திற்கு அவ்வாறு செய்ய முடியும் என்றுதோன்றவில்லை நாளைக்கு இந்த இரு இடைத் தேர்தல்களும் நடந்தாலும் காங்கிரஸ் அ. தி மு க. கூட்டணி அதுவரை நீடிக்குமா என்ற சந்தேகம் அ. தி மு. க. வினருக்கு ஏற்பட்டுவிட்டது. கூட்டணி வேண்டுமா வேண்டாமா என்று முடிவுசெய்யும் பொறுப்பு இன்று நரசிம்மராவிடம் மட்டும்தான்

சூழ்நிலை தமக்குச் சாதகமாக இல்லை என்றதும் ஜெயலலிதா தமது அணுகுமுறைகளை இப்போது வெகுவாக மாற்றிக்கொண்டுவிட்டார்.

இப்போதெல்லாம் தினமும் தலைமைச் செயலகத்திற்குப் போகிறார். கோப்புகளைப் பார்க்கிறார். அசாதாரணமான முறையில் தேங்கிக் கிடந்த கோப்புக்களை சரி செய்திருக்கிறார். புதிய தொழில்களைத் துவங்க அனுமதிகோரிய 172 கோப்புகளை அவர் அசுர வேகத்தில் சரி செய்தது அதிகாரிகளை அச்சுறுத்தி உள்ளது.

அவரது இத்திடீர் வேகம் அவருக்குக் கைகொடுக்கும் என்று தோன்றவில்லை. எல்லாம் மத்திய அரசின் தயவைப் பொறுத்தது அது

ஏற்கனவே ஆந்திர மாநில முதலமைச்சர் மாற்றப்பட்டுவிட்டார் இப்போது கர்நாடக மாநில முதலமைச்சர் பங்காரப்பாவும் இராஜினாமா செய்துவிட்டார்.

அடுத்து ஜெயலலிதாதான். ஜெயலலிதாவை 'டிஸ்மிஸ்' செய்வதால் தமிழ்நாட்டில் காங்கிரஸுக்கு அனுகூலம் ஏற்படும் என்ற எண்ணம் நரசிம்மராவ் மனதில் ஆணித்தரமாகப் படியும் என்றால் அப்போதே ஜெயலலிதா பதவிக்கு முடிவு கட்டப்பட்டுவிடும். அதுவரை மத்திய அரசும் பதவியில் நீடித்தால் ஜெயலலிதாவையும் விட்டுவைக்கும்.

நன்றி: 'வீரகேசரி'

## புதிதாக 4 கோடி மக்களை 'எய்ட்ஸ்' கிருமிகள் தாக்கும்

(ஜெனீவா)

ஒவ்வொரு 6 மாத காலத்திலும் சுமார் 10 லட்சம் பேர் வரையில் எய்ட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டுவருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் கவலை வெளியிட்டுள்ளது.

மேலும் இந்நூற்றாண்டின் இறுதியில் 4 கோடி மக்களை எய்ட்ஸ் நோய்க்கிருமிகள் தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் மேற்படிஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

எனவே எய்ஸ்ட் நோய் தடுப்பு முயற்சிக்கென ஒதுக்கப்படும் பணம் அதிகரிக்கப்படவேண்டும் என்றும் வளர்ந்து வரும் நாடுகளின் எய்ட்ஸ் தடுப்புக்கென வருடத்தில் 10 கோடி டாலர் செலவிடப்பட்டுவருவதாகவும் இத்தொகை 250 கோடி டாலர்களாக அதிகரிக்கப்படவேண்டுமெனவும் உலக சுகாதார ஸ்தாபனம் கேட்டுக்கொண்டுள்ளது (க)

## வெனிசுலாவில் புரட்சி 170 பேர் உயிரிழப்பு

(லண்டன்)

வெனிசுலாவில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற திடீர்புரட்சியில் 170 பேர்வரையில் கொல்லப்பட்டுள்ளார். 100பேர் காயமடைந்துள்ளனர்

கொலை செய்யப்பட்டோரில் 143 பொதுமக்களும் 27 படை அதிகாரிகளும் அடங்குவர் எனவும் வர்ணிக்கப்படுகிறது.

கடந்த 10மாத காலத்தில் வெனிசுலாவில் ஏற்பட்ட இரண்டாவது புரட்சி இதுவென தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 500படை அதிகாரிகள் உட்பட 1500 புரட்சிப் படையினர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு பாதுகாப்பமைச்சர் தெரிவித்துள்ளார். (க)

## கல்வி மனிதனின் அடிப்படை உரிமை

(நெல்லியடி)

''கல்வி மனிதனின் அடிப்படை உரிமையாகும். இவ்வேளையில் உயர்கல்வி வாய்ப்பு அனைவருக்கும் வழங்கப்படல் வேண்டும். இதன் மூலம் பொருளாதாரத்தை விருத்தி செய்யலாம்.''

இவ்வாறு இமையாணன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்ட யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் எம். குட்டித்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில். தொடர்ந்து பேசிய துணைவேந்தர் கூறியதாவது:

தமிழ் மாணவர்கள் அனைவரும் தமிழ் வரலாற்றைத் தெரிந்துகொள்ளவேண்டும். மாணவர்களிடையே மொழிப்பற்றை வளர்க்க ஆசிரியர்கள் உதவவேண்டும் என்று குறிப்பிட்டார்.

யாழ். பல்கலைக்கழக துணை விரிவுரையாளர் திரு ரி. கலாமணி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றினார்.

மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி துரைராஜா வழங்கினார். (160)

## விடுதி திருத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் உள்ள வைத்தியர் தங்கும் விடுதி தற்போது ஒரு பகுதி மேற்படி வைத்தியசாலை நிர்வாகத்தினரால் திருத்தப்பட்டு வருகிறது.

வைத்தியர்களுக்கான விடுதி இதுவரைகாலம் தனியார் ஹோட்டலில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (56)

## கற்கைநெறி வகுப்பு

(கொழும்பு)

கொழும்பில் கடமையாற்றுகின்ற கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கு, கொழும்பு பல்கலைக்கழகத்தில் 'பொருளாதார சமூக அறிவு சம்பந்தமான கற்கைநெறி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.

இக் கற்கைநெறி ஒன்பது மாதங்களைக் கொண்டதாய் அமையுமென்றும் இவ்வகுப்புக்களில் கலந்துகொள்ளும் கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கு கடமை விடுமுறையுடன் போக்குவரத்துக் கொடுப்பனவும் வழங்கப்படவிருப்பதாகக் கூறப்படுகிறது. (161)

ஸ்ரேலிங் பவுண்

## ஒய்வூதியகாரருக்கு புதிய ஏற்பாடு

(மானிப்பாய்)

ஸ்ரேலின் பவுண் ஒய்வூதியமாக பெறுவோருக்கு ஸ்ரேலிங் பவுண் இலங்கை ரூபா வீதத்தில் கொடுப்பனவு செய்ய ஒய்வூதியத் திணைக்களம் தீர்மானித்துள்ளது

இது சம்பந்தமான சுற்றுநிருபமொன்றும் சகலமாவட்ட அரசாங்க அதிபர்களுக்கும் ஒய்வூதியப் பணிப்பாளரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் யாழ். மாவட்டத்தில் தற்போது மேற்படி ஸ்ரேலின் பவுண் ஒய்வூதியம் பெறுபவர்கள் தமது பெயர், ஒய்வூதிய இலக்கம் ஒய்வூதியம் பெறும் வங்கி அவரது முகவரி ஒய்வூதியத்தொகை ஸ்ரேலின் பவுண்) போன்ற விபரங்களை உடனடியாக எழுதி கணக்காளர் ஒய்வூதியக் கிளை கச்சேரி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (17)

## க. பொ. த. வினாத்தாள்கள் விமானத்தில் வருகிறது

(நல்லூர்)

இம்மாதம் 7-ம் திகதி ஆரம்பமாகும் க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்கான வினாத்தாள்கள் விமானமூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படவிருக்கின்றன. பலாலிக்கு 4-ம் திகதி இவை வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

வடமாகாணத்தின் ஏனைய பகுதிகளான கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களுக்கு வினாத்தாள்கள் தரை மார்க்கமாக எடுத்துவரப்படும்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளும் அவ்அப் பாடசாலை அதிபர்களால் வழங்கப்பட்டு வருகின்றன (158-157)

## அலுவலகம் இடமாற்றம்

(மானிப்பாய்)

யாழ் செயலகத்தில் இயங்கி வந்த மோட்டார் போக்குவரத்து கிளை அலுவலகம் தற்போது செயலகத்திலுள்ள ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இயங்கி வருகிறது.

மோட்டார் போக்குவரத்து கிளை அலுவலகம் இருந்த இடத்தில் மாவட்ட கடற்றொழில் விரிவாக்க நிலையம் இயங்கிவருகிறது. (71)

## பஸ் விபத்து 24 பேர் பலி

(பீக்கிங்)

சீனாவில் தனியார் பேருந்து ஒன்று பள்ளத்தாக்கில் விழுந்ததால் 24பேர் பலியாகினர் 9 பயணிகள் காயமடைந்தனர். 140 அடி ஆழ பள்ளத்தாக்கில் இந்த பஸ் வீழ்ந்தது. (க)

# நவம்பர் மாதத்தில் புலிகளின் தாக்குதலில் 100க்கு மேற்பட்ட படையினர் பலி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் நவம்பரில் நடத்திய தாக்குதல்களில் நூற்றுக்கும் அதிகமான படையினர்கள் பலியானார்கள். பெருமளவு ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

அம்பாறை அறந்தலாவை இராணுவ நடவடிக்கையின் போது 25 படையினரும், கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோவும் 23ம் திகதி பலாலி கிழக்கு எல்லையில் புலிகள் நடத்திய திடீர் அதிரடியில் 59 படையினர் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதல்களின்போது பெருந்தொகையான ஆயுதங்களைப் படையினர் இழந்தது குறிப்பிடத்தக்கது.

## பெருமளவு ஆயுதம் மீட்பு

அலம்பில் பகுதியிலுள்ள பாரிய இராணுவ முகாம் புலிகளின் அதிரடியைத் தொடர்ந்து மூடப்பட்டதாக கூறப்படுகிறது. (நி)

# 2,500 பேருக்கு இலங்கையில் 'எய்ட்ஸ்'

(கொழும்பு)

இலங்கையில் எயிட்ஸ் நோயினால் இதுவரை 19 பேர் உயிரிழந்துள்ளனர் என்று எயிட்ஸ் கட்டுப்பாட்டு பிரிவுப் பொறுப்பாளர் டாக்டர் ஜயகுரு தெரிவித்துள்ளார்.

இன்று உலக எயிட்ஸ் தினம் ஆகையினால் எயிட்ஸ் நோய் பற்றி விடுத்த அறிக்கையிலேயே டாக்டர் ஜயகுரு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இலங்கையில் 62பேர் எச். ஐ. வி. கிருமிகள் தொற்றிஉள்ளதாக பதிவு செய்துள்ளார்கள். ஆனால் நாட்டில் ஏறக்குறைய 2500 பேர் இந்த நோயினால் பீடிக்கப்பட்டிருக்கலாம் என்றும் இலங்கையில் ஒரு நாளைக்கு 4 பேருக்கு இந்தநோய் தொற்றுவதாகவும் தெரிவித்தார். (சு)

## கப்பல் சேவை பற்றி செஞ்சிலுவை அதிகாரி அரச அதிபர் பேச்சு

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ். நகர் வந்துள்ள சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி திரு. டொமினிக் டுவோர் நேற்று யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரை யாழ். செயலகத்தில் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தினர்.

குறிப்பாக பருத்தித்துறை, கொழும்பு பயணிகள் கப்பல் சேவை பற்றி பேச்சுக்கள் நடாத்தப்பட்டதாகவும் மேற்படி சேவை ஆரம்பிக்கப்பட்டால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் தொடர்ந்து பாதுகாப்பு வழங்குவதற்கு தயக்கம் காட்டுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## ஓய்வூதிய வவுச்சர்

(மானிப்பாய்)

நவம்பர் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் நேற்று 30ந் திகதி யாழ். செயலகத்திலிருந்து உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (71)

### படையினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படை நடத்திய குண்டுத் தாக்குதலில் மூவரும் மற்றொரு பகுதியில் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் பொது மக்கள் 5 பேர் இறந்தனர் என்றும் அச்செய்தி தெரிவித்தது.

### வடபகுதி இராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார்ப் பிரதேசத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தின் பாதுகாப்பு பற்றி எழுந்த சர்ச்சையிலேயே இந்த இராணுவ அதிகாரி முற்றவாளியாக நிறுத்தப்பட்டிருக்கின்றாராம்.

இராணுவம் மிகக் கூடுதலான பிரதேசத்தைக் கைப்பற்றி அந்தப் பிரதேசத்தை தொடர்ந்து தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாது என்று கூறியமைக்கும் பாதுகாப்புக்காக கொடுக்கப்பட்ட இராணுவத்தினரின் தொகை போதாதென்று தெரிவித்தமைக்கும் மற்றும் பல காரணங்களுக்காக இவர் மேல் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (சு)

### கிளாலி படகு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற பயணிகள் யாவரும் நேற்றிரவு யாழ். திரும்பினர்

நேற்று முன்தினம் இரவு கிளாலி கடற்பகுதியில் இடம்பெற்ற கடற்படையினரின் தாக்குதலையடுத்துபடகோட்டி பலியான தும் காணாமல் போனதும் வாசகர்கள் அறிந்ததே. இச்சம்பவத்தைத்தொடர்ந்து கிளாலி போக்கு வரத்து சேவை தடைப்பட்டுள்ளது. (157)

### கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதனையடுத்தே பொலிஸ் நிலையங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கவேண்டிய நிலை ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

"சகல" பொலிஸ் நிலையங்களிலும் பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டு ஆயுதம் தாங்கிய பொலிஸார் 24 மணி நேரமும் உசார்நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். (க-கி)

## குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த பிரசாந்த் என்ற குழந்தை நேற்று மாலை யாழ். போதனா வைத்தியசாலையில் வயிற்றோட்ட நோய்க்குப்பலியானது. (159)

### தெற்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜே. வி. பி.யினரின் இந்த அச்சுறுத்தலையடுத்து பொலிஸார் தீவிர கண்காப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ரி)

### இலங்கையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாவில் நிலவும் மிகமோசமான யுத்த நிலை போன்றும் இலங்கையிலும் நெருக்கடிநிலை அதிகரித்து வருகிறது.

இலங்கையிலுள்ள நெருக்கடி குறித்து உலகுக்கு நினைவுபடுத்த வேண்டிய தேவை தமக்கு இருப்பதாகவும் அவர் கூறினார். (சி

### மட்டு. கோமாரியில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தெரிவித்துள்ளன.

இவ் விமானதளம் அடுத்த சில மாதங்களில் பல கோடி ரூபா செலவில் விரிவுபடுத்தி படையினரின் உபயோகத்திற்கு விடப்படவுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை ஹிங்குராகொடவில் ஆஸ்திரேலியாவின் உதவியுடன் சர்வதேசவிமான நிலையமொன்றை அமைக்கவும் அரசு முயற்சித்துவருகிறது. (க-சி)

### குரும்பசிட்டிப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாக இரு தரப்பும் துப்பாக்கிச் சூட்டினை மேற்கொண்டனர்.

இதனையடுத்து பலாலி இராணுவ முகாமிலிருந்து படையினர் கடும் ஷெல்தாக்குதல்களையும், துப்பாக்கிவேட்டுகளையும் மேற்கொண்டனர்.

ஏழாலைப்பகுதியை நோக்கி படையினர் நேற்றுமுன்தினமிரவு 8 மணியிலிருந்து அதிகாலை வரை கடும் துப்பாக்கிப் பிரயோகத்தைமேற்கொண்டபடியிருந்தனர். (56)

### புலிகளுடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிய தலைவர்களும் வேறு கட்சிகளின் தலைவர்களும் ஜனாதிபதிக்கு பகிரங்கமாகவும் நேரடியாகவும் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ்கட்சிகளுடனான சந்திப்பு எந்தவிதத்திலும் பிரச்னையை தீர்க்க உதவாதெனவும் இதனை அரசு நன்கு உணர வேண்டுமெனவும் பலர் அரசுக்கு தெரிவித்துள்ளனராம். (கி)

## கடந்த 4 மாதத்தில் ஆயிரம் பேர் வரை நாய்க்கடிக்கு இலக்காகினர்

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் ஆகஸ்ட் மாதத்திலிருந்து நவம்பர் மாதம் வரையில் யாழ். குடாப் பகுதி வைத்தியசாலைகளில் வீட்டு நாய்களினாலும் கட்டாக்காலி நாய்களினாலும் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கடியுண்டனர். இவர்களில் 200 பேர் வரையில் விசர்நாய்க்கடிக்குள்ளாகியிருக்கின்றனர். விசர் நாய்க்கடியால் நால்வர் பலியாகியுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் மட்டும் நான்கு மாதத்தில் 840 பேர் நாய்க்கடிக்குள்ளாகிசிகிச்சை பெற்றிருக்கின்றனர்.

இவர்களில் 145 பேர் விசர் நாய்க்கடிக்குள்ளாகி சிகிச்சை பெற்றதுடன் விசர்நாய்க்கடித் தடுப்பூசி மருந்தினை ஏற்றியுள்ளனர். (56)

## கிரிக்கெட்: இந்திய—தெ. ஆபிரிக்க போட்டி வெற்றி தோல்வி இல்லை

(ஜொகனஸ்பேர்க்)

இந்திய - தெ. ஆபிரிக்க அணிகளுக்கிடையில் நடைபெற்ற 2வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

வெற்றிபெற 318 ஓட்டங்களை கடைசிநாளில் பெறவேண்டும் என்ற நிலையில் ஆடத் தொடங்கிய இந்திய அணி 56 ஓட்டங்களை விக்கெட் எதனையும் இழக்காமல் பெற்றிருந்தது ஆனால் 60 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்தது. (அஸாருதீன், ரெண்டுல்கர் - 01) ஆட்டம் ட்ராவில் முடிவடைந்தது.

ஸ்கோர் விபரம்: தெ. ஆபிரிக்கா - 292, 252 இந்தியா- 227, 141-4.

ஃ ஃ ஃ

ஆஸ்திரேலியாவில் மே இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையிலான டெஸ்ட் போட்டியின் 9ம் நாள் முடிவில் ஆஸ்திரேலியா 2ம் இனிங்ஸில் 6 விக்கெட் இழப்பிற்கு 266 ஓட்டங்களை பெற்றது (டேவிட்பூண் - 111)

ஸ்கோர் விபரம்; ஆஸ்திரேலியா 293, 266-6 மே.இந்திய-371 (சி)

### யாழ். ஆஸ்பத்திரியில

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். போதனா வைத்தியசாலைப் பதிவேட்டின்படி கடந்த 7 மாத காலத்துள் 283 சிசுமரணங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இவற்றில் 148 குழந்தைகள் பிறந்து இறந்ததாகவும் மிகுதி 135 குழந்தைகளும் தாயின் வயிற்றினுள்ளேயே இறந்து பின் பிறந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கில் தொடரும்யுத்தம், போதிய போஷாக்கின்மை மற்றும் உளரீதியான காரணங்கள் ஆகியன இவ் இறப்பு விகித அதிகரிப்புக்கு காரணங்களாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஈ)

### இனப்பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தியா வலியுறுத்திவருகிறது.

இவ்வாறு முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலர் திரு. என் கே. ராஷ்கோத்திரா 'இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை' என்ற தலைப்பில் புதுடில்லியில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்: இனப்பிரச்னை நிலவும் நாடுகளில் இப்பிரச்னைக்கு பிரிவினை மூலம் தீர்வு காண்பது கடினம். கூடுதலான அளவுக்கு 'சுயாட்சி'யை வழங்குவதன் மூலமேதீர்வை எட்டமுடியும்.

இப்பிரச்னை நிலவும் நாடு ஒன்றில் முடியுமான அளவுக்கு சுயாட்சி முறையை வலியுறுத்துவதே இந்தியா கடைப்பிடித்துவரும் கொள்கையாகுமென்றும் அவர்தெரிவித்தார். சி-க)

## துப்பாக்கிச்சூடு பெண்காயம்

(யாழ்ப்பாணம்)

நேற்று அதிகாலை 4 மணியளவில் ஏழாலைப்பகுதியில படையினரால் மேற்கொள்ளப்பட்ட கடும் துப்பாக்கிச் சூட்டினால் இளம் பெண் ஒருவர் படுகாயமுற்றநிலையில் யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏழாலை மத்தியைச் சேர்ந்த திருமதி ஜெகதாதேவி விஜயகுமார் (22 வயது) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

### படை முகாம்களிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீவுப்பகுதி, மண்டைதீவு, பலாலி, மாதகல், அளவெட்டி பகுதி முகாம்களில் இருந்தே படையினர் ஷெல்தாக்குதல்களை மேற்கொண்டனர்.

அரியாலை கிழக்கு, அச்சுவேலி, பண்டத்தரிப்பு, சுழிபுரம், தெல்லிப்பளை ஆகிய இடங்களிலே இவை வீழ்ந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (56-159)

### பருத்தித்துறை

1-ம்பக்கத் தொடர்ச்சி)

அன்ரன் மொறிஸ் (28 வயது) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையான, பலாலியிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறையில் தொழில் செய்துவந்தவரே இச்சம்பவத்தின் போது மரணமானவராவார்.

ரோந்து வந்த கடற்படையினரின் பலத்த சூட்டினையடுத்துஇறந்தவருடன் சென்ற ஏனைய இருவரான ராசன், தாரா என்போர் இறந்தவருடன் படகையும் ஒருவாறு கரைசேர்த்தனர். (61)


## சைவ உணவகத்திற்கு தொழிலாளர்கள் தேவை

1. சமையலும் சுவீற் வேலை தெரிந்தவர்கள்
2. இடியப்பம் தயாரிப்பவர்
3. அரவை
4. குசினி வேலை உதவியாளர்கள்
5. ரீ மேக்கர்
6. தோசை போடுபவர்
7. உணவு பரிமாறுபவர்கள்
8. மேசை சுத்தம் செய்யும் பையன்கள்
9. காசாளர்
10. பில் கிளார்க்

மேற்குறிப்பிட்டுள்ள தொழிலாளர்கள் நேர்மையும் நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்

முன் வேலை செய்த ஸ்தாபனங்களிலுள்ள நற்சாட்சிப்பத்திரங்களுடன் 05 - 12 - 1992 க்கு முன் நேரில் சமுகம் தரவும்.

மலாயன் கபே

36, 38, பெரிய கடை வீதி

யாழ்ப்பாணம்.

(சி-7018)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 6ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு டிசம்பர் மாதம் 01ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a New Paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10336/8